


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




சனி ❖ பிப்ரவரி. 18, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 135 ❖ ரூ.10

### அதானியின் அசுர வளர்ச்சிக்கு மோடி அரசுதான் காரணம்

# மறுக்க முடியுமா?

## 9-ஆண்டுகளாக சிஐஜி, சிபிஐ போன்ற அரசு நிறுவனங்களின் கைகளை கட்டிப் போட்டிருக்கலாம். ஆனால், உண்மை வெளிப்பட்டே தீரும் காங்கிரஸ் மூத்த தலைவர் உத்தம் குமார் ரெட்டி

சென்னை, பிப்.18-

"மோடி பிரதமராக பதவியேற்ற 2014-ஆம் ஆண்டில் உலக கோடீஸ்வரர்கள் வரிசையில் 609-வது இடத்தில் இருந்த கவுதம் அதானி, 2022-ல் இரண்டாவது இடத்திற்கு வந்த அதிசயத்தை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அசுர வளர்ச்சிக்கு பிரதமர் மோடியின் ஆதரவுதான் காரணம் என்பதை எவராவது மறுக்க முடியுமா?" என்று தெலங்கானா மாநில காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் உத்தம் குமார் ரெட்டி கேள்வி எழுப்பியுள்ளார்.



சென்னை சத்யமூர்த்தி பவனில், தெலங்கானா மாநில காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் உத்தம் குமார் ரெட்டி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்: "பல ஆண்டுகளாக அமலாக்கப் பிரிவு, சிபிஐ மற்றும் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் போன்ற ஏஜென்சிகளைத் தவறாகப் பயன்படுத்தி, தனது அரசியல் அல்லது கருத்தியல் எதிரிகளை மிரட்டவும், தனது நிதி நலன்களுக்கு இணங்காத வணிக நிறுவனங்களைத் தண்டிக்கவும் பிரதமர் மோடி பயன்படுத்தியுள்ளார்.

1992-ஆம் ஆண்டில், ஹர்ஷத் மேத்தா வழக்கை விசாரிக்க ஒரு நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைக்கப்பட்டது, 2001-ஆம் ஆண்டில் கேதன் பரேக் வழக்கை நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரித்தது. அன்றைய பிரதமர்கள் நரசிம்ம ராவ் மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகிய இருவரும் கோடிக்கணக்கான இந்திய முதலீட்டாளர்களைப் பாதித்த ஊழல்களை விசாரிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். பிரதமர் மோடிக்கு என்ன பயம்? அவருக்கு கீழ் நியாயமான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை நடக்கும் என்ற நம்பிக்கை இல்லையா?

இந்த மோசடி நடந்து கொண்டிருக்கும்போது செபி என்ன செய்து கொண்டிருந்தது? இந்தக் குற்றச்சாட்டுகள் வெளியானதைத் தொடர்ந்து பங்கு விலைகளில் ஏற்பட்ட சரிவு, செயற்கையாக உயர்த்தப்பட்ட விலைகளால் ஏமாற்றப்பட்டு, அதானி குழுமப் பங்குகளில் முதலீடு செய்த லட்சக்கணக்கான சில்லறை முதலீட்டாளர்களை நிதி ரீதியாகப் பாதிப்படையச் செய்துள்ளது.

2023 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 15 வரை அதானி குழுமத்தின் பங்கு மதிப்பு ரூ.10,50,000 கோடி சரிந்தது. ஜூலை 19, 2021 அன்று, செபியின் விதிமுறைகளை மீறியதற்காக அதானி குழுமம் விசாரணையில் உள்ளதாக நிதி அமைச்சகம் நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டது. அதானி குழுமத்தில் எல்ஐசி வைத்திருக்கும் பங்குகளின் மதிப்பு 30 டிசம்பர் 2022 அன்று ரூ.83,000 கோடியிலிருந்து ரூ. 39,000 கோடியாகக் குறைந்தது.

பங்குகளின் விலை வீழ்ச்சி மற்றும் குழுமத்தின் மீதான குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும், 30 ஜனவரி 2023 அன்று அதானி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தில் ரூ.300 கோடி முதலீடு செய்யும்படி எல்ஐசியை மோடி அரசாங்கம் நிர்ப்பந்தித்தது. கறுப்புப் பணத்தை ஒழிக்க வேண்டும் என்ற பேசிய பிரதமர் மோடிக்குப் பிடித்த அதானி வணிகக் குழுமம் வெளிநாட்டுப் போலி நிறுவனங்கள் மூலம் பங்கு விலைகளைக் கையாண்டதாகக் கூறப்படுகிறது. அதானி குழுமத்தின் பங்குகளில் 4.5 பில்லியன் டாலர்கள் (ரூ. 37,000 கோடி ) மான்டெரோசா குழுமத்திடம் உள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி வினோத், அதானியின் மகளைத் திருமணம் செய்து கொண்டவர். தப்பியோடிய வைர வியாபாரிக்கும் இதில் தொடர்புள்ளதாகக் கூறப்படுகிறது. மோடி பிரதமராக பதவியேற்ற 2014-ஆம் ஆண்டில் உலக கோடீஸ்வரர்கள் வரிசையில் 609-வது இடத்தில் இருந்த கவுதம் அதானி, 2022-ல் இரண்டாவது இடத்திற்கு வந்த அதிசயத்தை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அசுர வளர்ச்சிக்கு பிரதமர் மோடியின் ஆதரவு தான் காரணம் என்பதை எவராவது மறுக்க முடியுமா?

மோடி அரசு கடந்த ஒன்பது ஆண்டுகளாக சிஐஜி, சிபிஐ போன்ற அனைத்து அரசு நிறுவனங்களின் கைகளையும் கட்டிப் போட்டிருக்கலாம். ஆனால், உண்மை வெளிப்பட்டே தீரும் என்பதையே அதானியின் வீழ்ச்சி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதனை, அமலாக்கத் துறையோ, சிபிஐ அமைப்போ முயன்றாலும் மறைக்க முடியாது. இது ஆரம்பம் தான். பாஜகவின் வண்டவாளம் தண்டவாளத்தில் ஏறப்போவதை யாராலும் தடுக்க முடியாது" என்று அவர் கூறினார். இந்த ச்சந்திப்பின்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கே.எஸ்.அழகிரி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



▶ தமிழக முதல்வரின் நான் முதல்வன் திட்டம் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் குறுகிய கால இலவச திறன் பயிற்சி திட்டங்கள், சங்கல்ப் திட்டம், ஒன்றிய அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுக்காக நடைபெறவிருக்கும் இலவச திறன் பயிற்சிகள் ஆகியவற்றை விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குனர் இன்னசென்ட் திவ்யா, மற்றும் அலுவலர்கள் மாவட்டத் திறன் பயிற்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கந்தர்வகோட்டை தீயணைப்புத் துறையினர் சார்பில் தீயணைப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு

கந்தர்வகோட்டை பிப்.18-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அருகில் உள்ள புதுநகர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கல்லாக்கோட்டை ஊராட்சியிலும் பேரிடர் மேலாண்மை ஒத்திகை மற்றும் தீ தடுப்பு தீயணைப்புத் துறையினர் சார்பில் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அருகே உள்ள புதுநகர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கல்லாக்கோட்டை ஊராட்சியிலும் தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு ஒத்திகை நடைபெற்றது. இதில் தீயை பரவாமல் எப்படி அணைப்பது, தீப்பற்றி எரிந்தால் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்த விழிப்புணர்வுகளும் தீபாதித்தவர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீத்தடுப்பு முன்னெச்சரிக்கைகள் குறித்து கந்தர்வகோட்டை தீயணைப்பு துறையினர் செயல் ஒத்திகை மூலம் பொதுமக்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்களுக்கும் கல்லாகோட்டையில் உள்ள தனியார் நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் செய்து காட்டினார்கள். இந்த நிகழ்விற்கு கந்தர்வகோட்டை தீயணைப்பு துறை நிலைய அலுவலர் குமரேசன் தலைமையில், ஒத்திக்கையை தீயணைப்பு துறையினர் செய்து காட்டினர்.

## கந்தர்வக்கோட்டை ஒன்றிய இல்லம் தேடிக் கல்வி மையங்களில் குறும்படங்கள் தயார் செய்ய அறிவுரை

கந்தர்வகோட்டை பிப்.18-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிவண்ணன் வழிகாட்டுதலின் படியும், புதுக்கோட்டை மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், கந்தர்வகோட்டை வட்டார கல்வி அலுவலர்கள் வெங்கடேஸ்வரி, நரசிம்மன், வட்டார வள மைய மேற்பார்வையாளர் பிரகாஷ் ஆகியோரிகளின் ஆலோசனையின் படியும், கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் இல்லம் தேடி கல்வித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.




கத்திரிக்காடு இல்லம் தேடிக் கல்வி மையத்தில் ஆண்டு விழா நடைபெற்றது. தன்னார்வலர் சத்யா வரவேற்றார். இவ்விழாவில் ஆடல்,பாடல், கரகாட்டம் என மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற பெற்றது. ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய கந்தர்வகோட்டை ஒன்றிய இல்லம் தேடிக்கல்வி ஒருங்கிணைப்பாளர் அ.ரகமதுல்லா, மாணவர்களின் கற்பனைத்திறன், படைப்பாற்றல் திறன், சிந்திக்கும் திறன்களை வெளிக்கொணரும் விதமாக சிட்டுக்களின் குறும்படம் என்ற நிகழ்வு நடைபெற உள்ளது. குறும்படத்திற்கான தலைப்புகளாக சுற்றுச்சூழல், எனது ஊர், குழந்தைகளின் பாதுகாப்பு, எனக்கு பிடித்த தலைவர், தன் சுத்தம் என்ற தலைப்பில் குறும்படங்களை தயார் செய்ய வேண்டும். தன்னார்வலர்கள் தங்களுடைய இல்லம் தேடிக் கல்வி மையங்களில் குழந்தைகளை கொண்டு உருவாக்க வேண்டும். ஒரு மையம் ஒரு குறும்படத்தை மட்டும் தயார் செய்ய வேண்டும். குறும்படத்திற்கான கதை, கதாபாத்திரம், வசனம் மற்றும் கதை நடத்தக்கூடிய சூழல், கால அமைப்பு ஆகியவற்றை தயார் செய்வதற்கு மாணவர்களை தன்னார்வலர்கள் ஊக்க படுத்த வேண்டும் என்று பேசினார். ஓவியம், கட்டுரை, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவாக தன்னார்வலர் ஆர்த்திகா நன்றி கூறினார்.

## பாலிடெக்னிக் நில விவகாரம்: பட்டுக்கோட்டை நகராட்சி தீர்மானத்தை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவு

சென்னை, பிப்.18-

30 ஆண்டுகளுக்கு முன்பு பாலிடெக்னிக் அமைக்க ஒதுக்கப்பட்ட நிலத்தை திரும்பப்பெறும் வகையில், பட்டுக்கோட்டை நகராட்சி நிறைவேற்றிய தீர்மானத்தை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் சாத்தான்காடு பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்காக 1964-ல், 37.93 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு கையகப்படுத்தியது. இந்நிலையில், 1982ஆம் ஆண்டு பாலிடெக்னிக் அமைக்க, அதே பகுதியில் 20 ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தரக் கோரி பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் சங்கம் அரசிடம் விண்ணப்பித்தது.

இதனை பரிசீலித்த அரசு, குடிநீர் திட்டத்திற்காக கையகப்படுத்திய நிலத்தில் 20 ஏக்கரை சங்கத்திற்கு ஒதுக்கி 1983-ஆம் ஆண்டு பட்டுக்கோட்டை நகராட்சி உத்தரவிட்டது. இதில் பாலிடெக்னிக், உணவு விடுதி ஆகியவை கட்டப்பட்ட நிலையில், அந்த நிலத்திற்கு ஒரு கோடியே ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 58 ரூபாய் விலை நிர்ணயம் செய்த அரசு, அந்த விலையை வசூலித்துக் கொண்டு, சங்கத்திற்கு நிலத்தை கிரையம் செய்து கொடுக்கும்படி பட்டுக்கோட்டை நகராட்சிக்கு உத்தரவிட்டது.

ஆனால், அந்தத் தொகையை வாங்க மறுத்த நகராட்சி, பத்திரப்பதிவும் செய்து கொடுக்காததால் 2013-ஆம் ஆண்டு சங்கத்தின் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்நிலையில், நகராட்சியை விரிவுபடுத்தி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதாக கூறி, பாலிடெக்னிக்குக்கு ஒதுக்கப்பட்ட 20 ஏக்கர் நிலத்தை திரும்பப்பெறுவது தொடர்பாக நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எவ்வித இடையூறும் இல்லாமல் 30 ஆண்டுகளாக முழு அளவில் பாலிடெக்னிக் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நகராட்சியின் தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும். அரசு நிர்ணயித்த தொகையை பெற்றுக்கொண்டு நிலத்தை பத்திரப்பதிவு செய்து தர உத்தரவிட வேண்டும் எனக்கோரி உயர் நீதிமன்றத்தில் பாலிடெக்னிக் நிர்வாகம் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, 8 ஏக்கரை பாலிடெக்னிக் சங்கம் வைத்துக்கொண்டு, மீதமுள்ள 12 ஏக்கரை நகராட்சியிடம் ஒப்படைக்கும்படி தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பை எதிர்த்து சங்கத்தின் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் வி.எம்.வேலுமணி, ஆர். ஹேமலதா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. 1983-லிருந்து 2013-ம் ஆண்டு வரை அந்த நிலத்தை எந்த திட்டத்திற்காகவும் பயன்படுத்தவில்லை. இந்நிலையில் தனி நீதிபதி முன்பு வழக்கு தொடரப்பட்ட பிறகு, நிலத்தை திரும்பப்பெறுவது என தீர்மானம் நிறைவேற்றியதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாக தெரிகிறது.

ஒதுக்கப்பட்ட 20 ஏக்கர் நிலத்தையும் பாலிடெக்னிக் பயன்படுத்தி வருகிறது. அதன்மூலம் பல கிராமப்புற மாணவர்கள் பயனடைந்துள்ளனர். எந்தவித உறுதியான திட்டமும் இல்லாத நிலையில் நிலத்தை திரும்பப்பெற நகராட்சிக்கு உரிமை இல்லை என க்கூறி தீர்மானத்தை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

மேலும் 2009-ம் ஆண்டு அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாயை, இதுவரையிலான காலகட்டத்திற்கு ஆண்டிற்கு 9 சதவீத வட்டியுடன் செலுத்தும்படி பாலிடெக்னிக் நிர்வாகத்துக்கு உத்தரவிட்டனர். அந்த தொகையை பெற்றுக்கொண்டவுடன் பட்டுக்கோட்டை நகராட்சி, நிலத்தை கிரயம் செய்துகொடுக்க வேண்டும் என்று நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

## திருவண்ணாமலை ஏ.டி.எம் கொள்ளை– விமானத்தில் தப்பிச்சென்ற கொள்ளையர்களை மடக்கி பிடித்த தனிப்படையினர்

தி.மலை பிப்.18-

திருவண்ணாமலையில் 4 ஏ.டி.எம். மையங்களில் கொள்ளையடித்துவிட்டு விமானத்தில் தப்பிச் சென்ற கொள்ளையர்கள் அரியானாவில் சிக்கினர். பிடிபட்ட 10 பேரிடம் தனிப்படையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.




திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 12-ந் தேதி அதிகாலையில் திருவண்ணாமலை நகரில் தேனிமலை மற்றும் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் ஏ.டி.எம். மையங்களிலும், போளூரில் ரெயில் நிலையம் சாலையில் உள்ள எஸ்.பி.ஐ. வங்கியின் ஏ.டி.எம். மையத்திலும், கலசபாக்கத்தில் உள்ள ஒன் இண்டியா வங்கியின் ஏ.டி.எம். மையத்திலும் மர்ம நபர்கள் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் ஏ.டி.எம். மையங்களில் இருந்த பணம் எடுக்கும் எந்திரங்களை வெல்டிங் எந்திரத்தின் மூலம் வெட்டி அதிலிருந்த ரூ.72 லட்சத்து 78 ஆயிரத்து 600-ஐ கொள்ளையடித்து சென்றனர். இதுகுறித்து வடக்கு மண்டல ஐ.ஜி. கண்ணன் மேற்பார்வையில் வேலூர் சரக டி.ஐ.ஜி. முத்துசாமி தலைமையிலான 9 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் திருவண்ணாமலை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் வடக்கு மண்டல ஐ.ஜி. கண்ணன் நிருபர்களிடம் கூறியதாவது:- கடந்த 12-ந் தேதி அதிகாலையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 ஏ.டி.எம். மையங்களில் கொள்ளை நடைபெற்றது. இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் பல்வேறு தடயங்கள் கிடைத்தன. அவ்வாறு கிடைத்த அறிவியல் ரீதியான தடயங்களை வைத்து குஜராத் மாநிலத்திலும், அரியானா மாநிலம் மேவாட் பகுதிலும் போலீஸ் அதிகாரிகள் முகாமிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். தற்போது அரியானாவை சேர்ந்த குற்றவாளிகள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டு உள்ளது உறுதியாகியுள்ளது. கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கோலார் பகுதியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்து திருவண்ணாமலைக்கு வந்து கண்காணித்து விட்டு கொள்ளையில் ஈடுபட்டு உள்ளனர். அதனைத் தொடர்ந்து தற்போது வரை கோலார் பகுதியில் 2 பேரிடம் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை நடத்தி வருகிறோம். மேலும் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டு தப்பி சென்ற 6 பேரை குஜராத்தில் தடுத்து நிறுத்தி அவர்களை பிடித்து விசாரணை நடத்தி வருகிறோம்.

அதுமட்டுமின்றி போலீஸ் நெருங்கியதை அறிந்து கோலார் பகுதியில் இருந்து பெங்களூர் வந்து, அங்கிருந்து விமானத்தின் மூலம் அரியானாவிற்கு தப்பி சென்ற 2 பேரை அரியானாவில் பிடித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணை இன்னும் நிறைவு பெறவில்லை. ஆனால் குற்றவாளிகள் அரியானாவில் இருந்து வந்தவர்கள் என்பது மட்டும் உறுதியாகி உள்ளது. மேலும் குற்றவாளிகளின் முக்கிய தடயங்கள், வீடியோக்கள், படங்கள் கிடைத்துள்ளது. இதனால் விரைவில் அவர்களது படங்கள், பெயர்கள் முழுமையான விசாரணைக்கு பின்னர் வெளியிடப்படும். அதன் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் இந்த சம்பவம் முடிவிற்கு வந்து விடும்.

இதுவரை 10 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. எந்த குற்றவாளிகளும் கைது செய்யப்படவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு சென்ற தனிப்படை போலீசாருக்கு அந்தந்த மாநில போலீசார் முழுமையாக ஒத்துழைப்பு அளிக்கின்றனர். மேலும் குற்றவாளிகளுக்கு தமிழ்நாட்டில் யாருடனும் தொடர்பு இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆனால் அவர்கள் கோலார் பகுதியில் தங்கியிருந்ததால் அங்கு அவர்களுக்கு தொடர்பு இருக்கலாம். தமிழ்நாடு போலீஸ் துரிதமாக செயல்பட்டு வருகிறது இவ்வாறு அவர் கூறினார். அப்போது வேலூர் சரக டி.ஐ.ஜி. முத்துசாமி, ராணிப்பேட்டை போலீஸ் சூப்பிரண்டு கிரண்ஸ்ருதி ஆகியோர் உடனிருந்தனர்.

வரலாறு 18.02.2023


# இன்று

18-2-2023







மஹா சிவராத்திரி

சனிப் பிரதோஷம்

படிகாரம் நீரில் கலந்து குளித்தால் உடல் வியர்வை நாற்றம் கட்டுப்படும்

சக வருடம் 1944 மாகம் 29

| சுபகிருது மாசி 6 | FEB - SAT சனி | ரஜப் 26 தேய்பிறை 049 / 316 |
|---|---|---|

தேய். திரயோதசி 29.38 (மா. 06.24) உத்திராடம் 23.48 (மா. 04.04) தியாஜ் 33.09 அகல் 29.14 சித்த. மஹா சிவராத்திரி. சனிப் பிரதோஷம். திருவோண விரதம். லிங்கோத்பவ தரிசனம். திருவண்ணாமலை அரிபிரம்மாதியர் அடிமுடி தேடியருளிய காட்சி.

| | நல்லநேரம் | கௌரி.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.30-5.30 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்; கும்ப லக்கனம் இருப்பு நா. 3 வி. 57; சந்திராஷ்டமம் திருவாதிரை புனர்பூசம்

கரணம் : 12-1.30; சூரிய உதயம் : 6.33

காய்ந்த மரம் கல் அடிபடும்

**இராசிபலன்**

| | |
|---|---|
| மேஷம் | நம்பிக்கை |
| ரிஷபம் | பெருமை |
| மிதுனம் | சுகம் |
| கடகம் | உயர்வு |
| சிம்மம் | தெளிவு |
| கன்னி | சுபம் |
| துலாம் | இரக்கம் |
| விருச்சி | அவதி |
| தனுசு | பயம் |
| மகரம் | அமைதி |
| கும்பம் | குழப்பம் |
| மீனம் | சாந்தம் |

**சிந்திப்போம்.... செயல்படுவோம்**

எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று நீயும் பின்தொடராதே உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு...



புதுக்கோட்டையின் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,250 | Rs. 5,612 |


# ஜெயங்கொண்டம் அருகே மனவள மற்றும் தற்காப்பு கலை பயிற்சி வகுப்புகள் துவக்க விழா



அரியலூர் பிப்.18-

ஜெயங்கொண்டம் அருகே, புது சாவடி கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியில், மனவள மற்றும் தற்காப்பு கலை பயிற்சிதுவக்கவிழா நடைபெற்றது.

இது பற்றி பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் செங்குட்டுவன் கூறியதாவது:

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், புதுச்சாவடி கிராமத்தில் உள்ள, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், மனவள மற்றும் தற்காப்பு கலை பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டது.

தமிழக அரசின் பள்ளி மாணவர்களுக்கான முன்னோடி திட்டங்களில் ஒன்றான இந்த பயிற்சியானது, அரியலூர் மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்விதிட்டத்தின் கீழ், அரசு பள்ளிகளில் ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு, மன வளத்தை பெருக்கவும், மனபயம் போக்கவும், மன இறுக்கம், மன அழுத்தம் ஆகியவற்றைகுறைத்து, மன தைரியத்தை உருவாக்கி, நற்சிந்தனையுடன் கற்றலில் மேம்படுத்திக்கொள்ள, இந்த மனவள மற்றும் தற்காப்பு கலை பயிற்சியானது வழங்கப்படுகிறது.

பயிற்சியின் துவக்க விழாவிற்கு ஜெயங்கொண்டம் வட்டார கல்வி அலுவலர் இராசாத்தி தலைமை தாங்கினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் சாந்தி அனைவரையும் வரவேற்றார். வட்டார கல்வி அலுவலர் மதலைராஜ், வட்டார வளமைய மேற்பார்வையாளர் கண்ணதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மனவள மற்றும் தற்காப்பு கலைபயிற்சிகளைமாகுரு ஷிஹான் பொன்னுசாமி மாஸ்டர் வழங்கினார். இந்த பயிற்சியானது மூன்று மாதகால அளவில் நடைபெற உள்ளது.

மாணவிகளின் வழிகாட்டியாக, ஆங்கில பட்டதாரி ஆசிரியர் ஹேமலதா, ஒருங்கிணைப்பாளராக கணித பட்டதாரி ஆசிரியர் செல்லதுரை, ஆசிரியர்கள் பவானி, ஜெயப்பிரியா ஆகியோர் செயல்படுகின்றனர் என்று கூறினார்.

# இந்தியாவிற்கு ஆதரவாக சீனாவிற்கு எதிராக அமெரிக்கா செனட் சபையில் தீர்மானம்



வாஷிங்டன் பிப்.18-

இந்தியாவிற்கு ஆதரவாக சீனாவிற்கு எதிராக அமெரிக்கா செனட் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அதில் சீனா ஆக்கிரமிப்பு செய்வதை கண்டிக்கிறோம் என்று கூறி அமெரிக்க செனட் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் அதில் சீனா ஆக்கிரமிப்பு செய்வதை கண்டிக்கிறோம் என்று கூறி அமெரிக்க செனட் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அமெரிக்க செனட் சபையில் தீர்மானத்தை மூன்று எம். பி.க்கள் அறிமுகப்படுத்தினர். அதில், அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. நாங்கள் இந்தியாவின் இறையாண்மை, பிராந்திய நேர்மையை மதிக்கிறோம்.

சீனா தனது ராணுவ பலத்தைப் பயன்படுத்தி எல்லைப் பகுதியில் நடத்தும் அத்துமீறல்களைக் கண்டிக்கிறோம். சீன அத்துமீறல்கள், அச்சுறுத்தல்களை சமாளிக்க இந்தியா மேற்கொள்ளும் தற்காப்பு நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெஃப் மார்க்லே, பில் ஹாகர்டி, ஜான் கார்னின் ஆகியோர் இந்த தீர்மானத்தை கொண்டு வந்தனர்.



கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


# தமிழ்நாட்டில் பிப்.21ம்தேதி வரை வறண்ட வானிலையே நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை பிப்.18-

தமிழ்நாட்டில் பிப்.21-ம் தேதி வறண்ட வானிலையே நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் பிப்.21-ம் தேதி வரை வறண்ட வானிலையே நீடிக்கும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் அதிகாலை நேரத்தில் பனிமூட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 31-32 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 21-22 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும். அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

# பொன்னமராவதி வட்டார விவசாயிகள் மதுரை வேளாண் அறிவியல் நிலையத்திற்கு கண்டுணர்வு பயணம்



புதுக்கோட்டை.பிப்.18-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகளுக்கு மாநில அளவிலான மானாவாரி நில வேளாண்மை குறித்து கண்டுணர்வு பயணமாக வெளியூர்களுக்குஅழைத்து செல்லப்பட்டனர்.

இந்த கண்டுணர்வு விவசாய பயணத்தினை புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் பெரியசாமி துவக்கி வைத்தார். பயணத்திற்கு கலைஞரின் வளர்ச்சி திட்ட தொகுப்பு கிராமங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் 50பேர் மதுரை வேளாண் அறிவியல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மேலும், வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன் மானாவாரி நில வேளாண்மை பற்றி விரிவாகஎடுத்துக்கூறினார். மேலும், சிறுதானிய பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துக் கூறினார். வட்டார வேளாண் விவசாயிகள் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கண்டுணர்வு பயண ஏற்பாடுகளை பொன்னமராவதி வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்தியபாமா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் நவீன்குமார், பிரசாத் ஆகியோர் செய்திருந்தனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே கார் இருசக்கர வாகனம் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 12-ஆம் வகுப்பு மாணவன் பலி



கள்ளக்குறிச்சி பிப்.18-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்ள கீரனூர் காலனி பகுதியை சேர்ந்த ஆனந்த் மகன் கிருஷ்ணா பன்னிரண்டாம் வகுப்பு படித்து வருகிறார். இவரும் அதே பகுதியை சேர்ந்த கல்லூரி படித்து வரும் ஆறுமுகம் மகன் மோகன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் நேற்று முந்தினம் மாலை உளுந்தூர்பேட்டையில் இருந்து சேலம் செல்லும் சாலையில் சுடுகாடு பகுதி அருகே சென்று கொண்டிருந்த பொழுது, உளுந்தூர்பேட்டை நோக்கி எதிரே வந்து கொண்டிருந்த கார் மீது எதிர்பாராத விதமாக இருசக்கர வாகனம் மோதியது. இந்த விபத்தில் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் கிருஷ்ணா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உடன் வந்த கல்லூரி மாணவன் பலத்த காயம் ஏற்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நிலையில், இத்தகவல் அறிந்த காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உயிரிழந்தவரின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்விற்காக கள்ளக்குறிச்சி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் பலத்த காயம் ஏற்பட்ட கல்லூரி மாணவருக்கு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இவ்விபத்து குறித்து உளுந்தூர்பேட்டை காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருத்தப்பட்ட முறைப்படி அக்னி வீரர்கள் தேர்வுக்கான அறிவிப்பு வெளியீடு



டெல்லி பிப்.18-

திருத்தப்பட்ட முறைப்படி அக்னிவீரர்கள் தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது.

ராணுவத்துக்கு அக்னி வீரர்கள் தேர்வு செய்யும் முறையில் சமீபத்தில் மாற்றம் செய்யப்பட்டது. அதன்படி இறுதியில் நடத்தப்படும் பொது நுழைவுத்தேர்வை முதலில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி முதலில் நுழைவுத்தேர்வு, பின்னர் உடல் தகுதித் தேர்வு, 3-வதாக மருத்துவ பரிசோதனை நடத்தப்படும் என ராணுவம் சமீபத்தில் அறிவித்தது. இந்த திருத்தப்பட்ட முறைப்படி அக்னி வீரர்கள் தேர்வுக்கான அறிவிப்பு நேற்று முந்தினம் வெளியிடப்பட்டு இருக்கிறது.

ராணுவத்தின் இணையதளத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது. இந்த பணிக்கு நேற்று முந்தினம் முதல் அடுத்த மாதம் (மார்ச்) 15-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது. விண்ணப்பதாரர்கள் தங்கள் வயது, கல்வித் தகுதி, உடல்தகுதி நிலைகள் மற்றும்பிறதகுதிகளைபதிவு செய்துவிண்ணப்பிக்கலாம் என ராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டு உள்ளது. அக்னி வீரர் தேர்வின் முதல் படியான பொதுத்தேர்வு ஏப்ரல் 17 முதல் 30-ந் தேதிக்குள் நாடு முழுவதும் சுமார் 180 மையங்களில்நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

# தமிழகத்தில் பிற மாநில மருத்துவ கழிவுகள் கொட்டுவதை முற்றிலும் தடுக்க வேண்டும் உயர்நீதிமன்ற மதுரை கிளை



மதுரை பிப்.18-

தமிழகத்தில் பிற மாநில மருத்துவ கழிவுகள் கொட்டுவதை முற்றிலும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரை கிளை தெரிவித்துள்ளது.

கேரளாவில் இருந்து தமிழ்நாட்டில் மருத்துவ கழிவுகள் கொட்டப்படுவதாக தென்காசியை சேர்ந்த சிதம்பரம் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்த பதில் மனுவில், மருத்துவக் கழிவுகள் கொட்டுவதை தடுக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கேரள மருத்துவக் கழிவுகள் கொட்டப்படும் விவகாரத்தில் தென்காசியில் 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. கேரள எல்லையோர மாவட்டங்களில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கப்படுகிறது என்றுதெரிவிக்கப்பட்டது. இதையடுத்துநீதிபதிகள்,பிற மாநில மருத்துவ கழிவுகள் தமிழ்நாட்டில் கொட்டப் படுவதை முற்றிலும் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கூறி விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் தபால் வாக்குகள் சேகரிக்கும் பணி தீவிரம்



ஈரோடு பிப்.18-

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் 2-வது நாளாக தபால் வாக்குகள் சேகரிக்கும் பணிகள் நடைபெற்றது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் 321 பேரும், மாற்றுத்திறனாளிகள் 32 பேரும் என 353 பேர் உள்ளனர். இவர்கள் வாக்குச்சாவடி செல்லாமல், தபால் ஓட்டாக பதிவு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. 100 சதவீத ஓட்டை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த, 4-ந் தேதி முதல், இது போன்றவர்கள் பட்டியல் பெறப்பட்டு, அவர்களிடம் தனி படிவம் பெறப்பட்டது. சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக்டர் குமரன் தலைமையில் இந்த பணிகள் நடைபெற்றது. தபால் வாக்குக்காக பதிவு செய்தவர்களிடம், தபால் ஓட்டை பெற நேற்று முந்தினம், 6 குழுக்கள் அமைக்கப்பட்டன.

காவல்துறை பாதுகாப்புடன், அந்த வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று தபால் ஓட்டை பதிவு செய்ய வைத்தனர். பின்னர் அந்த பெட்டி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டு உள்ளது. நேற்று முந்தினம் வீட்டில் இல்லாதவர்களிடம் நேற்று (வெள்ளிக்கிழமை) வாக்குகள் சேகரிக்கப்பட்டது. நேற்றும் அவர்கள் இல்லை எனில் வருகிற 20-ந் தேதி மீண்டும் வீட்டுக்கு வருவார்கள். அன்றும் அந்த வாக்காளர் இல்லை என்றால், அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படாது. மேலும் வருகிற 27-ந் தேதி நடக்கும் வாக்குப்பதிவின் போது, அவர்கள் வாக்குச்சாவடிக்கு சென்று ஓட்டு பதிவு செய்யவும் வாய்ப்பு வழங்கப்படாது என்று தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கர்நாடக காங்கிரஸ் உறுப்பினர்கள் காதில் பூவுடன் சட்டப்பேரவைக்கு வருகை



பெங்களூர் பி.18-

சித்தராமையா மட்டுமின்றி காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும்காதில்பூவுடன் சட்டப்பேரவைக்கு நேற்று வருகை தந்தனர்.

கர்நாடக பட்ஜெட் கூட்டத்தொடரில்பங்கேற்க அம்மாநில எதிர்க்கட்சி தலைவர் சித்தராமையா காதில் பூவுடன் சட்டப்பேரவைக்கு வருகை தந்தார். மேலும், சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் காதில் பூ வைத்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

2018 தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் கர்நாடக மாநிலத்தில் உள்ள 7 கோடி மக்களை பா.ஜ.க. அரசு ஏமாற்றி விட்டதாக குற்றச்சாட்டு எழுப்பியதுடன், கர்நாடக அரசின் பட்ஜெட் போலியானது என்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் விமர்சித்து வருகின்றனர்.

# செந்துறை அருகே தொடர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நபர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது



அரியலூர் பிப்18-

செந்துறை அருகே தொடர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நபர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி அரியலூர் மாவட்ட காவல்துறை வெளியிட்ட செய்தி குறிப்பில், அரியலூர் மாவட்டம், செந்துறை காவல் உதவி ஆய்வாளர் சாமிதுரைக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி, காவல் துறையினர் செந்துறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட உடையார்பாளையம் ரோடு, திரௌபதி அம்மன் கோயில் செல்லும் வழியில் உள்ள, மரப்பட்டறை அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்ற, சித்துடையார் கிராமத்தை சேர்ந்த ரத்தினம் மகன் பால்ராஜ் (48) என்பவரை விசாரணை செய்து, பரிசோதனை செய்ததில் அவர் 1கிலோ 100கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக எடுத்துச் சென்றது தெரிய வந்தது.

இதனை அடுத்து பால்ராஜ் கைது செய்யப்பட்டு, அவரிடம் இருந்து கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. காவல்துறையினர் பால்ராஜை காவல் நிலையம் அழைத்து வந்து, அவர் மீது வழக்கு பதிவு செய்தனர். இவர் மீது ஏற்கனவே குவாகம் காவல் நிலையத்தில் இரண்டு கஞ்சா வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பால்ராஜ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு புதுக்கோட்டை பாஸ்டர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் எதிரி பால்ராஜ் தொடர்ந்து இது போன்ற செயலில் ஈடுபட்டு வருவதாலும், இவர் வெளியே வந்தால் மேலும் பல்வேறு சமுதாய கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட கூடும் என்பதாலும், இவரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க வேண்டும் என்று, செந்துறை காவல் ஆய்வாளர் சபரிநாதன், அரியலூர் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் சங்கர் கணேஷ்க்கு பரிந்துரை செய்தனர்.

அதைத் தொடர்ந்து அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ் கான் அப்துல்லா பரிந்துரையை ஏற்று, அரியலூர் மாவட்ட ஆட்சியர் பெ.ரமண சரஸ்வதி, குற்றவாளியை, குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அதன்படி பால்ராஜ் திருச்சி மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு, குண்டர் தடுப்பு சட்டத்தில், சிறையில் அடைக்கப்பட்டார். அதற்கான ஆணை பிரதிகள் மத்திய சிறைக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பள்ளிக்கு அடிக்கடி விடுமுறை எடுக்கும் ஆசிரியர்கள் விவரங்களை அவசரமாக அனுப்ப கல்வித்துறை உத்தரவு

சென்னை பிப்.18-

பள்ளிக்கு அடிக்கடி விடுமுறை எடுக்கும் ஆசிரியர்கள் விவரங்களை அவசரமாக அனுப்ப கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குனர் அறிவொளி அனைத்து மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி உள்ள உத்தரவில், தொடக்க கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தொடக்கப்பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விடுப்பு சார்ந்து கீழ்காணும் விவரங்களை சேகரித்து அனுப்ப வேண்டும்.

நீண்ட கால விடுப்பில் உள்ளவர்கள், நீண்ட காலமாக தகவல் இன்றி பணிக்கு வராதவர்கள், தொடர்ந்து விடுப்பில் உள்ளவர்கள் மற்றும் அடிக்கடி விடுப்பில் உள்ளவர்களது விவரங்களை மிகவும் அவசரம் என கருதி இ-மெயில் மூலம் உடனே அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

18.02.2023 ❖ வரலாறு



புதுக்கோட்டை எஸ்விஎஸ் ஹீரோ மோட்டார்ஸ் ஷோரூமில் ஜூம் ஸ்கூட்டர் அறிமுக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. பாங்க் ஆஃப் இந்தியா வங்கி மேலாளர் ஜெய்கணேஷ், ஹீரோ நிர்வாக இயக்குனர் எஸ்விஎஸ் ஜெயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வாடிக்கையாளர் குணசேகரனுக்கு ஜூம் ஸ்கூட்டரை வழங்கி வாழ்த்தினார்கள்.

### சென்னை குருநானக் கல்லூரியில் உத்திரப்பிரதேச மாநிலம்

## விபிஎஸ்பி பல்கலைக்கழகத்தின் கல்வி, நிர்வாகத்தர மேம்பாடு குறித்த மாநாடு



சென்னை, பிப். 18 –

சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரியில் கல்வி மற்றும் நிர்வாகத் தரம் மேம்பாடு குறித்த மாநாட்டின் துவக்க விழா நடைபெற்றது. இம்மாநாட்டில் உத்திரபிரதேச மாநிலம் ஜான்பூரில் உள்ள வீர் பகதூர் சிங் பூர்வாஞ்சல் பல்கலைகழகத்தின் கல்வி மற்றும் வல்லுநர் குழு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேராசிரியர் மானஸ் பாண்டே தலைமையில் வணிகவியல், பொருளாதாரம், உளவியல் சார்ந்த கல்வி வல்லுனர்கள் வருகை புரிந்தனர்.


இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் பஞ்சில் சிங் நய்யார் பல்கலைகழகத்திற்கும் குருநானக் கல்லூரிக்கும் இடையே நிகழ்ந்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் கல்லூரி தர மதிப்பீடுகளுக்கு பல்கலைக்கழகதுணைவேந்தர் டாக்டர் எஸ்.மௌரியா வழங்கிய ஆலோசனை குறித்தும் வட இந்தியாவில் தமிழ் மொழி வளர்ச்சி பெறுவதற்கு பல்கலைக்கழகத்தில் நிரந்தரமான மையத்தை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை வைத்தும் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் இரகுநாதன், துணை முதல்வர் சாவித்திரி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

### பெரியபாளையம் அருகே மூன்று கோவில்களில்

## பூட்டை உடைத்து ஒன்றரை சவரன் தாலி, ரூ.40 ஆயிரம் பணம் கொள்ளை

### மர்ம நபர்களுக்கு போலீசார் வலை வீச்சு



ஊத்துக்கோட்டை, பிப். 18 –

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், தண்டலம் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ தரணீஸ்வரர் திருக்கோவில், மற்றும் பொன்னியம்மன் திருக்கோவில் ஆகியவை உள்ளது. இக்கோவில்களுக்கு அருகே கும்மிடிப்பூண்டி ஒன்றியம், முக்கரம்பாக்கம் ஊராட்சியை சேர்ந்த மாம்பேடு கிராமத்தில் ஸ்ரீ வேணுகோபால சுவாமி திருக்கோவில் ஒன்று உள்ளது.

இக்கோவில்களின் அர்ச்சகர்கள் நேற்று முன் தினம் இரவு கோவில்களை மூடிக்கொண்டு வீட்டிற்கு சென்றனர். நேற்று காலை பூஜை செய்ய கோவிலுக்கு வந்த அவர்களுக்கு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

ஸ்ரீகாமாட்சி அம்பாள் சமேத தரணீஸ்வரர் திருக்கோவிலில் அம்மன் கழுத்தில் இருந்த ஒன்றரை சவரன் தாலி மற்றும் பொன்னியம்மன் கோவிலிலிருந்த உண்டியல், ஸ்ரீ வேணுகோபால சுவாமி திருக்கோவிலில் பக்தர்களின் காணிக்கை பணம் ரூ.30,000 ஆகியவற்றை மர்ம நபர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு சென்றதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

மாம்பேடு கிராமத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வம் என்ற விவசாயி உடைய நிலத்தில் இருந்த டிராக்டரையும் மர்ம நபர்கள் சேதப்படுத்தி உள்ளனர். அங்கு வைத்திருந்த சுமார் 35 லிட்டர் டீசலை கீழே கொட்டி விட்டு, தண்ணீர் பாய்ச்ச அமைக்கப்பட்டு இருந்த பிளாஸ்டிக் பைப்புகளை சேதப்படுத்தி விட்டு சென்றிருந்தனர்.

இந்த கொள்ளை சம்பவம் குறித்து பெரியபாளையம் காவல் நிலையம் மற்றும் ஊத்துக்கோட்டை காவல் நிலையம் ஆகியவற்றில் கிராம மக்கள் மற்றும் விவசாயி பன்னீர்செல்வம் ஆகியோர் புகார் செய்தனர். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் வெங்கடேசன், ஏழுமலை ஆகியோர் தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். இந்த கொள்ளை சம்பவம் குறித்தும், விவசாய பொருட்களை நாசம் செய்தது குறித்தும் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

மேலும், கைரேகை நிபுணர்கள் விரைந்து வந்து தடயங்களை பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதியில் ரூ.2 கோடி மதிப்பில் நவீன மின் தகன மேடை பணி துவக்கம்



காஞ்சிபுரம், பிப். 18 –

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட நாகலத்து தெரு பகுதியில் உள்ள சுடுகாட்டில் நாகலத்து மேடு, ரங்கசாமி குளம், சின்ன காஞ்சிபுரம், பொய்கையாழ்வார் குளம், உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து தினந்தோறும் இறந்தவர்களை புதைப்பதும், எரிப்பதும் நடைபெற்று வருகிறது.

தினந்தோறும் அதிகளவில் இறந்தவர்களை தகனம் செய்து வருவதால் போதிய இடம் இல்லாமல் அவதிப்பட்டு வரும் நிலையில் மின் தகனம் செய்வதற்கான ஆணையை மாநகராட்சி பிறப்பித்து உள்ளது.

ஏற்கெனவே இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கல்லறைகளை இடித்து சுத்தம் செய்து சுமார் 2 கோடி மதிப்பில் நவீன மின்தகன எரிமேடைக்கான பணியை காஞ்சிபுரம் மாநகராட்சி மூன்றாவது மண்டல குழு தலைவர் சாந்தி ஸ்ரீனிவாசன் அடிக்கல் நாட்டினார். உடன் 48 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திக், 49 வது வார்டு உறுப்பினர் பூங்கொடி தசரதன் மற்றும் மாநகராட்சி பொறியாளர், மாநகராட்சி அலுவலர்கள் ஏராளமானர் உடன் இருந்தனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில், தென்காசி தெற்கு மாவட்டம் சார்பாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர், ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை ஆதரித்து வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் பொறுப்பாளரும், தலைமைக் கழக உறுப்பினருமான செல்லத்துரை, கடையநல்லூர் திமுக நகர செயலாளர் அப்பாஸ், நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீப் ரகுமான், ஒன்றிய குழு துணைத் தலைவர் ஐவேந்திரன் தினேஷ், கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் சுரேஷ், 1-வது வார்டு செயலாளர் காளிமுத்து, மசூது, முருகானந்தம், சையது மசூது, செய்யது மீரான், சாமிதுரை, சாகுல் ஹமீது மற்றும் நகர கழக, பேரூர் கழக, வார்டு செயலாளர்கள் திரளாக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.



வேலூர் மாவட்டம், திருமலைக்கொடியில் உலகளவில் புகழ்பெற்ற வேலூர் ஸ்ரீபுரம் நாராயணி பீடத்தில் சக்தி அம்மா அருளாசியுடன் மஹா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. ஸ்ரீபுரம் நாராயணி சக்தி அம்மா அருளாசியுடன் மஹா சிவராத்திரி விழா முன்னிட்டு உலகப் புகழ்பெற்ற ஸ்ரீ ஆனந்த நடராஜர் சன்னதியில் 18 தேதி இன்று பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிநடனம், சுவாமிக்கு சிறப்பு அலங்காரங்கள், சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் சக்திஅம்மாவின் அருள்ஆசி மற்றும் தீபாரதனை வழங்குதல் ஆகிய சிறப்பு நிகழ்ச்சியில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கோவில் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் மதர் சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆதரித்து நேற்று காலை மண்டல-1 குழு தலைவர், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் திமு. தனியரசு வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார், அவருடன் 8வது வட்ட செயலாளர் மணிகண்டன், 1வது வட்ட செயலாளர், மாமன்ற உறுப்பினர் சிவக்குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண்குமார், தமிழ்ச்செல்வன் குமரன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.



புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு நல்லாத்தூர் முதல் சுரக்குடி வரை செல்லும் பகுதிக்கு பொதுப்பணி துறையின் மூலம் ரூபாய் 6,41,60,000/- நிதி ஒதுக்கீடு செய்து தார் சாலை அமைக்கும் பணியானது நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் போக்குவரத்துறை அமைச்சர் . சந்திர பிரியங்கா நேரில் சென்று சாலைகளை ஆய்வு செய்து சாலையின் தரம் மற்றும் பணிகளின் விவரம் குறித்து பொதுப்பணித்துறை மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து பணிகளை விரைந்து முடிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## மதுராந்தகம் அருகே வில்லிப்பாக்கம் கிராம உப்பள தொழிலாளர்கள் சாலை மறியல் போராட்டம்



செங்கல்பட்டு, பிப். 18 –

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சூனாம்பேடு அருகே உள்ள வில்லிபாக்கம் கிராமத்தில் உள்ள பத்மா கெமிக்கல்ஸ் தனியார் உப்பு உற்பத்தி ஆலையில் உள்ள தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நூற்றுக்கும் மேற்பட்டோர் சூனாம்பேட்டையில் இருந்து வெண்ணங்குபட்டு செல்லும் சாலையில் வில்லிபாக்கம் என்ற இடத்தில் சாலை மறியல் ஈடுபட்டனர்.

இந்த நிறுவனத்தில் தினக்கூலி தொழிலாளர்களாக 500 க்கும் மேற்பட்டோர் கடந்த 32 ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றனர். இவர்களை பணி நிரந்தரம் செய்யவில்லை. பணிநிரந்தரம் செய்யக் கோரி பல்வேறு போராட்டங்கள் நடத்தி மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டும் எதுவும் நடக்கவில்லை.

தமிழக அரசு ஆணைப்படி குறைந்தபட்ச தின கூலியான ரூபாய் 500 வழங்கிட வேண்டும். நிறுவனத்தில் இருந்து போலி ஒப்பந்தகாரர்களை வெளியேற்ற வேண்டும். தொழிலாளர்கள் சட்ட விதிகளை அமல்படுத்திட வேண்டும் என்கின்ற கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது சம்பந்தமாக மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் நேரில் வந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

## சீர்காழியில் மூன்று ஆஞ்சநேயர் கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்: பரபரப்பு– போலீசார் பாதுகாப்பு





சீர்காழி , பிப். 18 –

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வாய்க்காங்கரை தெருவில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோவில், கடைவீதி ஆஞ்சநேயர் கோவில், தென்பாதி ஆஞ்சநேயர் கோவில் ஆகிய மூன்று கோவிலுக்கு வெடிகுண்டு வைத்துள்ளதாக மயிலாடுதுறை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு மர்மநபர் செல்போனில் பேசி உள்ளார்.


இதனையடுத்து போலீசார் ஆஞ்சநேயர் கோவில்களில் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் மோப்பநாய் மற்றும் வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் சோதனை மேற்கொண்டனர். வெடிகுண்டு மிரட்டலால் சீர்காழி நகர் முழுவதும் பரபரப்பாக காணப்படுகிறது.

இதனையடுத்து கட்டுப்பாட்டுக்கு அறைக்கு பேசிய மர்மநபர் செல்போனை கொண்டு போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளர். மூன்றுமே ஆஞ்சநேயர் கோவிலாக இருப்பதால் யார் பேசியது, எதற்காக பேசினார் என போலீசார் தீவிர விசாரணையில் ஈடுப்பட்டுள்ளனர்.

மிரட்டல் விடுக்கப்பட்ட 3 கோவல்களிலும் சாமிகும்பிட பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## மயிலாடுதுறையில் நாட்டியாஞ்சலி : இரண்டாம் நாள் விழாவில் வெளிநாட்டு கலைஞர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்பு



மயிலாடுதுறை, பிப். 18–

மகாசிவராத்திரியை முன்னிட்டு மயிலாடுதுறை மாயூரநாதர் பெரிய கோவிலில் தென்னகப் பண்பாட்டு மையம், மத்திய அரசின் கலாச்சாரத்துறை மற்றும் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் 17-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா புதன்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதைத்தொடர்ந்து இரண்டாம் நாள் நாட்டியாஞ்சலி விழாவில் மயிலாடுதுறை ஷண்முகா நாட்டியப்பள்ளி குழுவினர், பெங்களூரு வைஷ்ணவி நாட்டியஷாலா குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னை ஸ்ரீ சாய் ந்ருத்யாலயா குழுவினரின் வள்ளலார் அருள் பெருஞ்ஜோதி நாட்டிய நாடகம் நடைபெற்றது. சிங்கப்பூர் கதக்கர்ஸ் கதக் குழுவினரின் சிவனும் பார்வதியும் உலகை உருவாக்குதல் கதக் சிறப்பு நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. இதேபோன்று சிதம்பரம் மஞ்சுபாஷினி, சாருவர்தினி குழுவினர் மற்றும் பெங்களூரு விந்தியா அகாடமி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மயூர நாட்டியாஞ்சலி விழாவில் கலந்து கொண்ட கலைஞர்களுக்கு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் சான்றிதழும், நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டது. இதில் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.






வேலூர் மாவட்டம், ஊரிசு கல்லூரி டி 4 வளாகத்தில் நடைபெற்ற "மாபெரும் தமிழ் கனவு" என்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் எழுத்தாளர் செல்லதுரை, பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா, மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) முத்து ராமலிங்கம், ஊரக வளர்ச்சி திட்ட முகமை இயக்குனர் க.ஆர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் இராமச்சந்திரன், தனித் துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு தனஞ்செழியன், மண்டல இணை இயக்குனர் கல்லூரி கல்வி முனைவர் காவேரி அம்மாள், கல்லூரி முதல்வர் நெல்சன் விமலநாதன் மற்றும் மாணவியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் கோப்பைக்கான போட்டியில்

## குடியாத்தம் ஸ்ரீ அபிராமி கலை, அறிவியல் மகளிர் கல்லூரி மாணவிகள் மூன்றாம் இடம் பிடித்தனர்



வேலூர், பிப். 18 –

வேலூர் மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மட்டைப்பந்து போட்டி காட்பாடியில் உள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் ஸ்ரீ அபிராமி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியை சேர்ந்த மாணவிகள் மூன்றாமிடம் பிடித்தனர். பரிசு தொகையாக ரூ.11,000 வென்று சாதனை படைத்துள்ளனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை அபிராமி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் தலைவர் எம்.என். ஜோதிகுமார் முதல்வர் முனைவர் ஆர்.எஸ். வெற்றிவேல், கல்லூரி நிர்வாக அலுவலர் கே.முருகவேல், கல்வி இயக்குனர் முனைவர் எம். பிருந்தா மற்றும் உடற்கல்வி இயக்குனர் முனைவர் ஆர்.பாலசுப்பிரமணி மற்றும் உதவி உடற்கல்வி இயக்குனர் ஆர்.துர்கா ஆகியோர் வாழ்த்து தெரிவித்து பாராட்டினர்.

## வேலூர் பழைய பேருந்து நிலையம் டாஸ்மாக் கடை அருகே 24 மணி நேரமும் திருட்டுத்தனமாக மதுபானம் விற்பனை

### பொதுமக்கள் அவதி



வேலூர், பிப். 18 –

வேலூர் பழைய பேருந்து நிலையம் அரசு மதுபான கடை அருகே 24 மணி நேரமும் கள்ளத்தனமாக மது விற்பனை ஜோராக நடைபெற்று வருகிறது. இதுகுறித்த தகவல் சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டும் காவல் துறை கண்டு கொள்ளவில்லை என்பது பொதுமக்கள் குற்றச்சாட்டு.

வேலூர் மாநகருக்கு உட்பட்ட பழைய பேருந்து நிலையத்திற்கும் - மண்டி தெருவுக்கும் இடைப்பட்ட தெருவில் அரசுக்கு சொந்தமான இரண்டு டாஸ்மாக் கடைகள் செயல்பட்டு வருகிறது. அரசு விதிகளின்படி மதியம் 12 மணிக்கு திறக்கப்படும் அரசு டாஸ்மாக் கடைகள் இரவு 10 மணி வரை செயல்படுகிறது.

இதற்குப் பிறகு இந்த இரண்டு டாஸ்மாக் கடைகளுக்கு அருகில் உள்ள உணவுபண்டங்கள் விற்கும் (ஸ்னாக்ஸ்) கடையில் டாஸ்மாக் மூடப்படும் இரவு 10 மணி முதல் தொடர்ந்து இரவு முழுவதும் தொடர்ந்து மதியம் 12 மணி வரை அரசு டாஸ்மாக் கடை திறக்கும் வரை கள்ளத்தனமாக அரசு மதுபானம் விற்பனை செய்யப்படுகிறது.

அரசு கடை செயல்படும் நேரத்தை காட்டிலும் கள்ளத்தனமாக இயங்கி வரும் கடை அதிக நேரம் செயல்படுவதாக கூறப்படுகிறது. வண்டி தெரு மற்றும் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ளதால் இரவு நேரத்தில் விற்கப்படும் கள்ளத்தனமான மது விற்பனையால் பெண்கள் மற்றும் பொதுமக்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் கள்ளத்தனமாக செயல்படும் கடையை மூடி அவர்கள் மீது சட்டரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



மஹா சிவராத்திரி விழாவையொட்டி புதுச்சேரி ஸ்ரீ சித்தானந்தர் கோயிலில் நடைபெற்ற நாட்டியாஞ்சலி நிகழ்வில் கலைஞர்கலின் அபிநயங்களின் சில துளிகள்.

# புதுக்கோட்டை செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

புதுக்கோட்டை பிப்.18-

புதுக்கோட்டை செந்தூரான்பாலிடெக்னிக் கல்லூரியில் சென்னையை சேர்ந்த ரானே மெட்ராஸ் நிறுவனத்திற்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.



கல்லூரி முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்து பேசினார்கள். கல்லூரி தலைவர் செல்வராஜ்மற்றும்நிர்வாக இயக்குநர் வயிரவன் மற்றும் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். வேலைவாய்ப்பு அலுவலர் லெட்சுமி வரவேற்புரை வழங்கினார்கள்.

ரானே மெட்ராஸ் நிறுவனத்திற்கு ஆட்களை தேர்வு செய்ய வருகை தந்திருந்த அந்நிறுவனத்தின் மனிதவள மூத்த மேலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பயிற்சி அலுவலர் மாதவன் தகுதியுடைய இயந்திரவியல் மற்றும் வாகனவியல் துறையை சேர்ந்த 84 மாணவர்களை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு உட்படுத்திமாணவர்களின் திறமையை இனம் கண்டார்கள். இத்தகைய பல்முனை தேர்வுக்குப் பின் 67 மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கான ஆணையை அந்நிறுவன மேலாளர் வழங்கியபின் மாணவர்களிடையே உரையாற்றினார்.

கல்லூரி முதன்மை செயல் அலுவலர் கார்த்திக் தேர்வான மாணவர்களை வாழ்த்தி பேசினார்கள். இதில் உப தலைவர் நடராஜன், தாளாளர் ராமையா, முதன்மை செயல் இயக்குநர் பாண்டி கிருஷ்ணன், மனிதவள இயக்குனர் வயிரவன் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக வாகனவியல் துறை மூத்த ஆசிரியர் உமா சீலன் நன்றியுரை வழங்கினார்.

# மயிலாடுதுறை தொகுதி மேம்பாட்டு நிதி பணிகளுக்கு எம்.எல்.ஏ ராஜகுமார் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்

மயிலாடுதுறை, பிப். 18 -

மயிலாடுதுறை சட்டப்பேரவை தொகுதி மேம்பாட்டு நிதியில் மயிலாடுதுறை நகராட்சி 19-வது வார்டு மற்றும் 23-வது வார்டு பகுதிகளில் புதிய நியாய விலை கடை கட்ட தலா ரூ.18 லட்சமும், 6-வது வார்டில் திருவிழந்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கலையரங்கம் கட்டுவதற்கு ரூ.8 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.



இதையடுத்து அந்த இடங்களில் நடைபெற்ற பூமி பூஜையில் மயிலாடுதுறை எம்எல்ஏ ராஜகுமார், நகராட்சி ஆணையர் செல்வ பாலாஜி, நகராட்சி தலைவர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடக்கி வைத்தனர். இதில் நகர மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## இந்திய வம்சாவளியை சேர்ந்த நீல் மோகன்

# யூடியூப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக நியமனம்

வாஷிங்டன் பிப்.18-

இந்திய வம்சாவளியை சேர்ந்த நீல் மோகன் யூடியூப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பதவிக்கு தேர்வாகி உள்ளார்.




கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக சுந்தர் பிச்சை, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் சிஇஓவாக சத்யா நாதெள்ளா ஆகியோர் உள்ள நிலையில் இந்திய வம்சாவளியை சேர்ந்த நீல் மோகன் யூடியூப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பதவிக்கு தேர்வாகி உள்ளார்.

நீல் மோகன் 2008-ல் கூகுளில் சேர்ந்தார். தொடக்கத்தில் இருந்தே கூகுள் நிறுவனத்தில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றி வந்த இவர் பெரிதும் கவனிக்கப்பட்டார். 2012 சமயத்தில் இவர் யூ டியூப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். இதையடுத்து 2015-ல் யூடியூப்பின் தலைமை தயாரிப்பு அதிகாரியானார். இதனைத் தொடர்ந்து தற்பொழுது சேர்ந்த நீல் மோகன் யூடியூப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி பதவிக்கு தேர்வாகி உள்ளார்.

# அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் டிரைவர் பணியிடங்கள் நேரடி நியமனங்கள் மூலம் நிரப்பப்படும் என அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை பிப்.18-

அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தில் டிரைவர் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் நேரடியாக நிரப்புவதற்கான உத்தரவு வெளியிடப்பட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு இன்றியமையாத பொது போக்குவரத்து சேவைகளை தினந்தோறும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் வழங்கிவருகின்றன.

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களிலும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்டில் 685 ஓட்டுநர் உடன் நடத்துனர் (டிரைவர் கம் கண்டக்டர்) பணியிடங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (கும்பகோணம்) லிமிடெட்டில், 122 ஓட்டுநர் பணியிடங்களையும் நேரடி நியமனம் மூலம் அதாவது வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்து நிரப்பிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனரால் ஓட்டுநர் உடன் நடத்துனர் பணியிடங்களுக்கு தேவையான கல்வித் தகுதி, வயது மற்றும் பிற தகுதிகள் பெற்ற தகுதி வாய்ந்த நபர்களின் மூப்பு பட்டியல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்தும் பெறப்படும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மேலாண் இயக்குனர், ஓட்டுநர் பணியிடங்களுக்கு தேவையான கல்வித் தகுதி, வயது மற்றும் பிற தகுதிகள் பெற்ற தகுதி வாய்ந்த நபர்களின் மூப்பு பட்டியல் அப்போக்குவரத்துக் கழக வட்டார எல்லைக்குட்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பெறப்படும். மேலும், ஓட்டுநர் உடன் நடத்துனர் மற்றும் ஓட்டுநர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் அந்தந்த போக்குவரத்துக் கழகங்களால் செய்தித்தாள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டு தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து இணையவழியில் விண்ணப்பங்கள் பெறப்படும். அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து தகுதி வாய்ந்த நபர்களை தேர்வு செய்வதற்காக அந்தந்த மேலாண் இயக்குனர்களால் குழு அமைக்கப்பட்டு, அக்குழு ஓட்டுநர் உடன் நடத்துனர் மற்றும் ஓட்டுநர் பணியிடங்களுக்கான நபர்களை, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் உதவியுடன் தற்போதுள்ள அரசு விதிமுறைகளின்படி தேர்வு செய்வார்கள். இதன் மூலம், பொதுமக்களுக்கான பொது போக்குவரத்து சேவைகள் மேம்படும் என்று கூறப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் அடுத்த பிலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை சேர்ந்த 4 மாணவிகள் காவிரி ஆற்றில் எதிர்பாராத விதமாக உயிரிழந்ததை தொடர்ந்து, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் மாணவிகளின் குடும்பத்தினரிடம் நேற்று நேரில் சென்று ஆறுதல் கூறி, தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூபாய் ஒரு லட்சம் வீதம் 4 லட்சம் மதிப்பிலான உதவித்தொகைகளை வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, உதவி திட்ட அலுவலர் தங்கமணி, வட்டாட்சியர் வெள்ளைசாமி, ஒன்றிய குழு உறுப்பினர் சத்தியசீலன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# ஜெயங்கொண்டம் அருகே மயான சாலையில் பாலம் கட்டும் பணிக்கான தொடக்க விழா



அரியலூர் பிப்.18-

ஜெயங்கொண்டம் அருகே, கழுவந்தோண்டி கிராமத்தில், மயான சாலையில் பாலம் கட்டும் பணிக்கான தொடக்க விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், கழுவன்தோண்டி ஊராட்சியில், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டம் 2021-2022 மூலமாக, மயானம் செல்லும் சாலையில், ரூபாய் 40.91 லட்சம் மதிப்பீட்டில், பாலம் அமைக்கும் பணியை, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் பெ.ரமண சரஸ்வதி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஈஸ்வரன், செயற்பொறியாளர் பிரபாகரன், வட்டாட்சியர் துரை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகானந்தம்(வட்டார ஊராட்சி), முருகன்(கிராம ஊராட்சி), ஊராட்சி ஒன்றிய இளநிலை பொறியாளர் நடராஜன், ஊராட்சி மன்ற தலைவர் மகாலிங்கம், ஒன்றியக்குழு உறுப்பினர் சிவகுமார், துணைத்தலைவர் ஆனந்தி மற்றும் கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சென்னையில் நடைப்பயிற்சி மேற்கொண்ட ஐஏஎஸ் அதிகாரி திடீர் உயிரிழப்பு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை பிப்.18-

ஈரோடு மாவட்ட முன்னாள் ஆட்சியரும், தமிழக சாலை மேம்பாட்டு திட்ட இயக்குனருமான கதிரவன்(55) நேற்று நடைபயிற்சியின் போது மாரடைப்பு ஏற்பட்டு காலமானார்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தை சேர்ந்தவர் கதிரவன். விவசாய குடும்பத்தை சேர்ந்த இவர் முதுகலை வேளாண்மை பட்டதாரி. இவர் டி.என்.பி.எஸ்.சி. குரூப்-1 தேர்வில் தேர்ச்சி பெற்று 2002-ம் ஆண்டு பயிற்சி துணை மாவட்ட ஆட்சியராக தருமபுரி மாவட்டத்தில் பணியில் சேர்ந்தார். பின்னர் கள்ளக்குறிச்சி, அறந்தாங்கி, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியராக (ஆர்.டி.ஓ.) பணியாற்றினார். சுனாமியின் போது சிறப்பு துணை மாவட்ட ஆட்சியராக பணியாற்றி பாதிக்கப்பட்டவர்கள் நலத்திட்டங்கள் பெற உதவினார். பின்னர் 2007-ம் ஆண்டு மாவட்ட வருவாய் அதிகாரியாக பதவி உயர்வு பெற்ற இவர் விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் பணியாற்றினார்.

சேலம் மாவட்ட ஆவின் பொது மேலாளராகவும் இருந்தார். 2013-ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். அந்தஸ்து பெற்ற இவர் வேளாண்மைத் துறை கூடுதல் இயக்குனராக இருந்தார். பின்னர் மதுரை மாநகராட்சி ஆணையாளராக நியமிக்கப்பட்டார். 2016-ம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஆட்சியராக பதவி ஏற்றார். அங்கிருந்து ஈரோடு மாவட்டத்தின் 33-வது மாவட்ட ஆட்சியராக கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பொறுப்பேற்றார். இதனையடுத்து ஈரோடு மாவட்டத்தில் ஆட்சியராக இருந்தபோது கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று காலை சென்னையில் நடை பயிற்சியின் போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. உடனே அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு அருகில் இருந்த மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியுள்ளனர். இவருக்கு மனைவியும், 2 மகள்களும் உள்ளனர். சேலம் டேன்மேக் மேலாண் இயக்குநராக இருந்த கதிரவனுக்கு அண்மையில் தான் நெடுஞ்சாலைத்துறையில் புதியபொறுப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் கதிரவன், ஐ.ஏ.எஸ் அவர்கள் உடல் நலக்குறைவின் காரணமாக மறைவெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# டெல்லியில் 7 வயது சிறுமியை தத்தெடுத்து சித்ரவதை- செவிலியர் உட்பட மூவர் கைது

டெல்லி பிப்.18-

பாதிக்கப்பட்ட சிறுமியின் உடலில் 18 இடங்களில் தீக்காயங்களும், தழும்புகளும் இருப்பது தெரியவந்தது.

டெல்லியில் உள்ள ஆர்.கே.புரம் காவல் நிலையத்திற்கு கடந்த 9-ந் தேதி, 7 வயது சிறுமியை அடித்துதுன்புறுத்தியதாக புகார் வந்துள்ளது. சிறுமியின் உடலில் இருந்த காயங்களைப் பார்த்து, அந்த சிறுமியின் பள்ளி ஆசிரியை போலீசில் புகார் அளித்ததாக கூறப்படுகிறது. இந்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்திய போது, பாதிக்கப்பட்ட சிறுமியின் உடலில் 18 இடங்களில் தீக்காயங்களும், தழும்புகளும் இருப்பது தெரியவந்தது. தொடர்ந்து சிறுமியிடம் நடத்திய விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. டெல்லி சப்தார்ஜங்க்பகுதியில்உள்ள ஒரு மருத்துவமனையில் செவிலியாராகபணியாற்றி வரும் ரேணு குமாரி(50) என்பவர், தனது உறவினரின் 7வயது மகளை தத்தெடுத்துள்ளார். தத்தெடுத்த முதல் நாளில் இருந்தே அந்த சிறுமியை ரேணு குமாரி அடித்து சித்ரவதை செய்து வந்துள்ளார்.

டிசம்பர், ஜனவரி மாதங்களில் இரவு நேரத்தில் வீட்டின் பால்கனியில் சிறுமியை படுக்க வைத்துள்ளார். சிறுமியின் உடலில் சூடு வைத்தும், நாக்கை கத்தியால் அறுத்தும் கொடுமைப் படுத்தியுள்ளார். இவ்வாறு தினந்தோறும் சிறுமியை ரேணு குமாரி அடித்து துன்புறுத்தி வந்தநிலையில், அந்த சிறுமியின் உடலில் காயங்களும், தழும்புகளும் ஏற்பட்டுள்ளன. இந்த காயங்களை அந்த சிறுமியின் பள்ளி ஆசிரியை கவனித்து போலீசில் புகார் அளித்துள்ளார். இந்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தி ரேணு குமாரி, அவரது கணவர் ஆனந்த் குமார் மற்றும் அவர்களது மகன் ஜானி ஆகிய 3 பேரையும் கைது செய்துள்ளனர். சிறுமிக்கு தேவையான மருத்துவ சிகிச்சைவழங்கப்பட்டுள்ள நிலையில், கைது செய்யப்பட்டவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை ராமாபுரத்தில் போலி ஆவணங்கள் தயாரித்து ரூ.30 லட்சம் மோசடி: பெண் உட்பட 2 பேர் கைது

சென்னை பிப்.18-

சென்னை முகப்பேர் பகுதியை சேர்ந்த நல்லுசாமி(37) ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இவருக்கு கடந்த 2021ம் ஆண்டு ராமாபுரம் பகுதியை சேர்ந்த பொன்னரசி என்பவர் அறிமுகமானார். அப்போது அவர் தன்னிடம் கெருகம்பாக்கத்தில் 10ஆயிரம் சதுர அடி நிலம் விற்பனைக்கு உள்ளதாக கூறினார். இதையடுத்து நல்லுசாமி ரூ30லட்சம் முன்பணம் கொடுத்து பொன்னரசியிடம் ஒப்பந்தம் போட்டதாக தெரிகிறது. பின்னர் நிலம் தொடர்பான



ஆவணங்கள் மற்றும் சர்வே எண்ணை ஆய்வு செய்தபோது நிலத்தின் உரிமையாளர் அமெரிக்காவில் இருப்பதும் பொன்னரசி போலி ஆவணங்கள் தயாரித்து மோசடியில் ஈடுபட்டதும் தெரிந்து நல்லுசாமி அதிர்ச்சி அடைந்தார்.

இதையடுத்து மோசடியில் ஈடுபட்ட பொன்னரசி மற்றும் அவரது கூட்டாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ராமாபுரம் போலீசில் நல்லுசாமி புகார் அளித்தார். வளசரவாக்கம் உதவி கமிஷனர் கவுதமன், ராமாபுரம் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜன் மற்றும் போலீசார் ஏற்கனவே பட்டாபிராமை சேர்ந்த கிஷோர், பாடி புதுநகரை சேர்ந்த சிவராஜ் மற்றும் ஜெயகோபி ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். தொடர்ந்து தலைமறைவாக இருந்து வந்த பொன்னரசி மற்றும் வடபழனியை சேர்ந்த சத்தியமூர்த்தி ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர்.




புதுக்கோட்டை கைக்குறிச்சி வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது. நிகழ்வுக்கு கல்லூரியின் செயலாளர் பி.கருப்பையா தலைமை தாங்கினார். பொருளாளர் கதிரேசன் முன்னிலை வகித்தார். முதல்வர் ஜீவானந்தம், கல்வியியல் கல்லூரியின் முதல்வர் இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். வீல்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மனிதவள அலுவலர்கள் திருமலைமதன், மெய்யப்பன் ஆகியோர் வளாக நேர்காணல் நடத்தினார்கள். வளாக நேர்காணலில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் 150-க்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். முன்னதாக ஒருங்கிணைப்பாளர் திருமலையரசன் அனைவரையும் வரவேற்றார். இணை ஒருங்கிணைப்பாளர் பிரபுதாசன் நன்றி கூறினார்.

# ஆவுடையார்கோவிலில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான இலவச மருத்துவ மதிப்பீடு முகாம்

ஆவுடையார்கோவில் பிப்.18-

ஆவுடையார்கோவில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி வட்டார வள மையம் சார்பில், மாற்றுத்திறனாளிகள் திட்டத்தின் கீழ் 0 முதல் 18 வயதுடைய மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான இலவச மருத்துவ மதிப்பீடு முகாம் ஆவுடையார்கோவில் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.



முகாமில் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் தாமரை செல்வன் வரவேற்புரை கூறினார். அறந்தாங்கி கல்வி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் சண்முகம் தலைமை தாங்கினார். மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி, வட்டார கல்வி அலுவலர்கள் முத்துக்குமார், புவனேஸ்வரி மலர் விழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆவுடையார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் உமாதேவி சிறப்புரை வழங்கினார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோசலை வாழ்த்துரை வழங்கினர்.

முகாமில் 105 மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். அடையாள அட்டை இல்லாதோருக்கு அட்டை வழங்கப்பட்டது. மாதாந்திர உதவித்தொகை, ஸ்மார்ட் கார்டு பதிவு, முதலமைச்சர் காப்பீடு பதிவு மற்றும் அரசு சலுகைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு மற்றும் தேநீர் வழங்கப்பட்டது. முகாமில் மாவட்ட மகளிர் மேம்பாட்டு குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். விழாவின் இறுதியில் சிறப்பாசிரியர் கரோலின் நன்றியுரை கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை வட்டார மேற்பார்வையாளர் ஆறுமுகம், ஒருங்கிணைப்பாளர் குணசீலன் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் ஸ்டெல்லா, .ஆரோக்கியராஜ் சிறப்பு பயிற்றுநர்கள், இயன்முறை மருத்துவர் ஆகியோர் செய்து இருந்தனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அதானி 2014 ஆம் ஆண்டில் 609 வது இடம் 2022 இல் 2வது இடம் எப்படி?

# தொடர் விடுமுறை எடுக்கும் ஆசிரியர்கள் இயக்குனர் புதிய உத்தரவு





# மருந்து கழிவுகள் தமிழகத்தில் கொட்டுவதை தடுக்க வேண்டும்


| சென்னை / புதுக்கோட்டை | 18.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சைதன்யர் , இந்திய மதகுரு (பி.1486) (இ.1534)



இராமகிருஷ்ணர் , இந்திய ஆன்மிகத் தலைவர் (பி.1836) (இ.1886)



மா. சிங்காரவேலர் , இந்தியப் பொதுவுடமைவாதி, விடுதலைப் போராட்ட வீரர் (பி.1860) (இ.1946)



கிருஷ்ணா சோப்தி , இந்திய எழுத்தாளர் (பி.1925) (இ.2019)



அப்துல் ஹலீம் ஜாபர் கான் , இந்திய சித்தார் கலைஞர் (பி.1927) (இ.2017)



## இன்றைய நினைவு நாள்

ரிச்சர்ட் டி சொய்சா , இலங்கை ஊடகவியலாளர் (பி.1958) (இ.1990)



டி. ராமா நாயுடு , தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1936) (இ.2015)

